ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30,சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| ntspapLgth; | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| jpfjp | 2020.10.09 |

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2020 ஓகத்து

### முக்கிய பண்புகள்

| | 2020 ஓகத்து | 2020 சன – ஓகத் |
|---|---|---|
| வர்த்தகப் பற்றாக்குறை | ஐ.அ.டொலர் 342 மில்<br>2019 ஓகத்: ஐ.அ.டொ 541 மில் | ஐ.அ.டொலர் 3,812 மில்<br>சன-ஓகத் 2019: ஐ.அ.டொ. 4,855 மில் |
| வணிகப்பொருள் ஏற்றுமதிகள் | ஐ.அ.டொலர் 947 மில்<br>2019 ஓகத்: ஐ.அ.டொ 1,033 மில்<br>-8.3% ஆண்டிற்கு ஆண்டு | ஐ.அ.டொலர் 6,445 மில்<br>சன-ஓகத் 2019: ஐ.அ.டொ. 8,030 மில்<br>-19.7% ஆண்டிற்கு ஆண்டு |
| வணிகப்பொருள் இறக்குமதிகள் | ஐ.அ.டொலர் 1,289 மில்<br>2019 ஓகத்: ஐ.அ.டொ 1,574 மில்<br>-18.1% ஆண்டிற்கு ஆண்டு | ஐ.அ.டொலர் 10,257 மில்<br>சன-ஓகத் 2019: ஐ.அ.டொ. 12,886 மில்<br>-20.4% ஆண்டிற்கு ஆண்டு |

**சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்**
2020 ஓகத்: -
சன-ஓகத் 2020: ஐ.அ.டொ. 956 மில்
(-60.0% ஆண்டிற்கு ஆண்டு)

**தொழிலாளர் பணவனுப்பல்கள்**
2020 ஓகத்: ஐ.அ.டொ. 664 மில்
(28.2% ஆண்டிற்கு ஆண்டு)
சன-ஓகத் 2020: ஐ.அ.டொ. 4,346 மில்
(-1.5% ஆண்டிற்கு ஆண்டு)

**கொபப** (முதனிலை மற்றும் இரண்டாந்தரச் சந்தைகள் - தேறிய)
ஓகத் 2020: ஐ.அ.டொ. -44 மில்.
சன-ஓகத் 2020: ஐ.அ.டொ. -173 மில்.




**அரச பிணையங்கள்** (தேறிய)
ஓகத் 2020: ஐ.அ.டொலர் -7 மில்.
சன-ஓகத் 2020: ஐ.அ.டொலர் -521 மில்.




**மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்**
ஓகத் 2020 இறுதியில் - ஐ.அ.டொலர் 7.4 பில்
(5.1 மாத இறக்குமதிகள்)




**செலாவணி வீதம்** (ஐ.அ.டொ. ஒன்றுக்கு ரூ.)
திசெ இறுதியில் 2019 – 181.6340
ஓகத் இறுதியில் 2020 – 186.1578




இலங்கை மத்திய வங்கி, வணிகப்பொருள் வர்த்தகச் செயலாற்றம் தொடர்பான மேலதிகத் தகவல்களைக் கொண்ட "மாதாந்த வர்த்தக செய்தித்திரட்டு" ஒன்றினை வெளியிட்டு வருகிறது. இதனைப் புள்ளிவிபரங்கள், பொருளாதாரக் குறிகாட்டிகள், மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டின் கீழ், இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் பார்வையிட முடியும்.
https://www.cbsl.gov.lk/en/monthly-trade-bulletin

## பொதுநோக்கு

வர்த்தகப் பற்றாக்கையில் ஏற்பட்ட மேம்பாடு, தொழிலாளர் பணவனுப்பல்களில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு என்பனவற்றின் முக்கிய ஆதரவுடன் 2020 ஓகத்துக் காலப்பகுதியில் இலங்கையின் வெளிநாட்டுத் துறை அநேக விடயங்களில் தொடர்ந்தும் மீட்சியடைந்திருக்கிறது. இம்மாத காலப்பகுதியில், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் வணிகப்பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் வீழ்ச்சி காணப்பட்டமைக்கிடையிலும் இன்றியமையாதனவல்லாத பொருட்களின் இறக்குமதி மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டுப்பாடுகள் மற்றும் குறைவடைந்த மசகெண்ணெய் விலைகள் என்பனவற்றின் காரணமாக வணிப்பொருள் இறக்குமதிகளில் ஏற்பட்ட குறைப்பின் விளைவாக வர்த்தகப் பற்றாக்குறை ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் மேம்பட்டது. இருப்பினும் கூட, தொற்று உலகளாவிய கேள்வியைப் பாதித்தமைக்கிடையிலும் ஏற்றுமதிச் செயலாற்றம் தொடர்ந்தும் மூன்றாவது மாதமாக வலுவான நிலையில் காணப்படுகிறது. அதேவேளை, 2020 ஓகத்தில் தொழிலாளர் பணவனுப்பல்கள் கணிசமான வளர்ச்சியைப் பதிவுசெய்தமையின் மூலம் நடைமுறைக் கணக்கு வலுவடைந்திருக்கிறது. நிதியியல் கணக்கில் அரச பிணையங்கள் சந்தையிலிருந்து சிறிதளவு வெளிநாட்டு முதலீட்டு வெளிப்பாய்ச்சல்கள் பதிவுசெய்யப்பட்ட வேளையில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையும் இம்மாத காலப்பகுதியில் ஒரு சில வெளிநாட்டு முதலீட்டு வெளிப்பாய்ச்சல்களைப் பதிவுசெய்திருக்கிறது. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட அதிகரித்த தேறிய உட்பாய்ச்சல்களின் காரணமாக மத்திய வங்கி மொத்த அலுவல்சார் ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்காக இம்மாத காலப்பகுதியில் வெளிநாட்டுச் செலாவணியினை ஈர்த்துக் கொள்ளக்கூடியதொரு நிலையில் காணப்பட்டது. ஓகத்தில் நடுப்பகுதியில் ஓரளவு தளம்பல்களை எடுத்துக்காட்டிய இலங்கை ரூபா மாதத்தின் இறுதியில் உறுதியடைந்தது.

**அட்டவணை 1: வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்தின் சுருக்கம்(அ)**

| வகை | ஓகத் 2019 ஐ.அ.டொ மில் | ஓகத் 2020 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) | சன - ஓகத் 2019 ஐ.அ.டொ மில் | சன - ஓகத் 2020 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 1,033 | 947 | -8.3 | 8,030 | 6,445 | -19.7 |
| இறக்குமதிகள் | 1,574 | 1,289 | -18.1 | 12,886 | 10,257 | -20.4 |
| வர்த்தக மீதி (தேறிய) | -541 | -342 | | -4,855 | -3,812 | |
| சுற்றுலாவிலிருந்தானவருவாய்கள் | 271 (ஆ) | - | - | 2,389 (ஆ) | 956 (இ) | -60.0 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 518 | 664 | 28.2 | 4,414 | 4,346 | -1.5 |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கானஉட்பாய்ச்சல் (தேறிய)(ஈ) | -12 | -44 | | 22 | -173 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (மொத்தம்) | 269 | 114 | | 5,935 | 1,417 | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 16 | 1 | | 432 | 91 | |
| நீண்ட காலக் கடன்கள் | 254 | 113 | | 1,103 | 1,325 | |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | - | - | | 4,400 | - | |
| வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (உ) | | | | 535 | 345 | |
| திரண்ட நிலுவை | | | | 1,451 | -722 | |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை

(அ) தற்காலிகமானது

(ஆ) 2019 இற்கான சராசரி தங்கும் காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரி செலவின மதிப்பீடுகள் தொடர்பில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையில் திருத்தப்பட்டது

(இ) இந்த தற்காலிக மதிப்பீடுகள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் 2020 அளவீட்டு மதிப்பீடுகளின் வெளியீட்டின் பின்னர் திருத்தப்படலாம்

(ஈ) இரண்டாந்தர மற்றும் முதலாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது

(உ) இலங்கை முதலீட்டுச் சபையினால் பதிவுசெய்யப்பட்டவாறான நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய நேரடி முதலீடுகளையும் உள்ளடக்குகிறது

## வர்த்தக மீதி மற்றும் வர்த்தக மாற்று விகிதம்

- ஏற்றுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சியிலும் பார்க்க இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி விரைந்த வேகத்தில் காணப்பட்டதன் காரணமாக **வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை** 2019 ஓகத்தின் ஐ.அ.டொலர் 541 மில்லியனிலிருந்து 2020 ஓகத்தில் ஐ.அ.டொலர் 342 மில்லியனுக்கு குறுக்கமடைந்தது. அத்துடன், ஒன்றுசேர்ந்த அடிப்படையில் வர்த்தகப் பற்றாக்குறையானது 2019இன் தொடர்பான காலப்பகுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 4,855 மில்லியனிலிருந்து 2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையான காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 3,812 மில்லியனுக்கு ஐ.அ.டொலர் 1 பில்லியனுக்கும் மேலாக குறுக்கமடைந்தது. இக்காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறையில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கான முக்கிய பங்களிப்புக் காரணிகள் வரைபடம் 1இல் காட்டப்பட்டுள்ளன.
- அதேவேளை, **வர்த்தக மாற்று விகிதம்** அதாவது இறக்குமதி விலைகளுக்கான ஏற்றுமதி விலைகளின் விகிதம் 2020 ஓகத்தில் (ஆண்டிற்கு ஆண்டு) 4.6 சதவீதத்தினால் மேம்பட்டமைக்கு ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியிலும் பார்க்க இறுக்குமதி விலைகளின் வீழ்ச்சி விரைந்த வேகத்தில் காணப்பட்டமையே காரணமாகும்.

**வரைபடம்: 1 : 2020 சனவரி – ஓகத்தில் வர்த்தகப் பற்றாக்குறையின் வீழ்ச்சிக்குப் பங்களித்த முக்கிய காரணிகள் (ஐ.அ.டொ. மில்லியனில்)**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2: மாதாந்த வர்த்தகப் பற்றாக்குறை (2019 – 2020)**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 3: வர்த்தக மாற்று விகிதம் (2019 - 2020)**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்

- தற்போதைய உலகளாவிய சந்தை நிலைமைகளைப் பரிசீலனையில் கொள்கையில், ஏற்றுமதிச் செயலாற்றம் தொடர்ந்தும் உத்வேகமாகக் காணப்பட்ட போதும் 2020 ஓகத்தில் **வணிகப்பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான** வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையிலும் அதேபோன்று மாதத்திற்கு மாத அடிப்படையிலும் வீழ்ச்சியடைந்தன. இதற்கமைய, 2020 ஓகத்தில் வணிகப்பொருள் ஏற்றுமதிகள் 2019 ஓகத்தில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,033 மில்லியனுடனும் 2020 யூலையில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,085 மில்லியனுடனும் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 947 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன. ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சியானது அனைத்து முக்கிய மூன்று ஏற்றுமதி வகைகளிலும் அதாவது கைத்தொழில், வேளாண்மை மற்றும் கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் பதிவுசெய்யப்பட்ட வீழ்ச்சியிலிருந்தே தோன்றியிருக்கிறது.

- 2020 ஓகத்தில், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், கைதொழில் ஏற்றுமதிகள் 10.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு புடவைகள் மற்றும் ஆடைகள், பெற்றோலிய உற்பத்திகள், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள், தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணிகள் அத்துடன் அடிப்படை உலோகங்கள் மற்றும் அதன் பொருட்களுடன் தொடர்பான ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும். 2020 ஓகத்தில் புடவைகள் மற்றும் ஆடைகளிலிருந்தான வருவாய்கள் 11.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு ஐக்கிய அமெரிக்காவிற்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்குமான குறைந்த ஆடை ஏற்றுமதிகளே வழிவகுத்தன. எனினும், ஏனைய தயாரிக்கப்பட்ட பொருட்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருக்கும் முகக் கவசம் மற்றும் பாதுகாப்பு உடைகள் போன்ற தனிப்பட்ட பாதுகாப்புச் சாதனங்களிலிருந்தான வருவாய்களில் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரிப்பொன்று பதிவுசெய்யப்பட்டது. குறைந்த நீர்க்கல எரிபொருளின் அளவுகள் மற்றும் விலைகள் என்பனவற்றின் காரணமாக பெற்றோலிய ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, அறுவைச் சிகிச்சை மற்றும் ஏனைய கையுறைகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்த போதும் ரயர் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக இறப்பர் உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன. மாறாக, 2020 ஓகத்து மாத காலப்பகுதியில் பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் (பிளாத்திக்கு மற்றும் அதன் ஆடைப்பொருட்களின் முக்கிய காரணமாக) மற்றும் உணவு, குடிபானம் மற்றும் புகையிலை (முக்கியமாக திரவத் தெங்குப்பால், தேங்காய்க் களி மற்றும் தேங்காய் பால் மா போன்றவை காரணமாக) பெறுமதி கூட்டப்பட்ட தெங்கு உற்பத்திகளின் காரணமாக துணைவகைகளிலிருந்தான வருவாய்கள் 2020 ஓகத்து மாத காலப்பகுதியில் அதிகரித்தன.

- 2020 ஓகத்தில் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், சிறிதளவால் வீழ்ச்சியடைந்தன. வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான ஒட்டுமொத்த வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு 13.3 சதவீதத்தில் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்த தேயிலை ஏற்றுமதிகளும் அதனைத் தொடர்ந்து கடலுணவு மற்றும் இறப்பரும் வழிவகுத்தன. முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020 ஓகத்து மாத காலப்பகுதியில் உயர்ந்த விலைகள் அவதானிக்கப்பட்டமைக்கிடையிலும் குறைந்த ஏற்றுமதி அளவுகளின் காரணமாக தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன. இம்மூன்று துணை வகைகளும் நீங்கலாக வேளாண்மை ஏற்றுமதிகளின் மற்றைய அனைத்துத் துணை வகைகளும் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. 2020 ஓகத்தில் வாசனைத்திரவியங்களிலிருந்தான வருவாய்கள் 2019 ஓகத்துடன் ஒப்பிடுகையில் அதிகரித்தமைக்கு கறுவா மற்றும் கராம்பு என்பனவற்றின் உயர்ந்த ஏற்றுமதி அளவுகளே வழிவகுத்தன. தெங்கு உள்ளீட்டு உற்பத்தி மற்றும் உள்ளீடு அல்லாத உற்பத்தி இரண்டிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களின் காரணமாக தெங்கு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தன. 2020 ஓகத்தில் சிறு வேளாண்மை உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் 2019 உடன் ஒப்பிடுகையில் அதிகரித்தமைக்கு 2019 செத்தெம்பரிலிருந்து அவதானிக்கப்பட்ட பாக்கு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், தொடர்ந்தும் அதிகரித்து வருவதே காரணமாகும்.

- 2020 ஓகத்தில் கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் வீழ்ச்சியடைந்தமைக்கு இரும்புத் தாதுக்கள், கழிவு இரும்புத்தாதுக்கள், சாம்பல் கட்டிகள் மற்றும் சாம்பல் ஏற்றுமதிகளிலிருந்தான குறைந்த வருவாய்கள் வழிவகுத்த போதும் புவிசார் கற்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தன.

2020 ஓகத்தில், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 3.2 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில், அலகுப் பெறுமதிச் சுட்டெண் 11.2 சதவீதத்தினால் தேய்வடைந்து குறைந்த ஏற்றுமதி விலைகளின் காரணமாக ஏற்றுமதிகளிலிருந்தான சராசரியான வருவாய் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் வீழ்ச்சியடைந்தமையை எடுத்துக்காட்டின.

**வரைபடம் 4: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 5: மாதாந்த ஏற்றுமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

### அட்டவணை 2: வணிகப்பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (அ)

| வகை | ஓகத் 2019 ஐ.அ.டொ மில் | ஓகத் 2020 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) | சன-ஓகத் 2019 ஐ.அ.டொ மில் | சன-ஓகத் 2020 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **812.1** | **729.0** | **-10.2** | **6,330.2** | **4,905.5** | **-22.5** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 33.7 | 40.8 | 21.0 | 303.7 | 302.9 | -0.3 |
| விலங்குத்தீன் | 8.1 | 7.7 | -5.1 | 88.8 | 75.6 | -14.9 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 499.6 | 440.0 | -11.9 | 3,736.6 | 2,853.1 | -23.6 |
| இதில் ஆடைகள் | 464.4 | 389.6 | -16.1 | 3,478.5 | 2,528.1 | -27.3 |
| புடவைகள் | 26.5 | 22.5 | -14.9 | 187.5 | 154.9 | -17.4 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 8.8 | 28.0 | 218.3 | 70.5 | 170.1 | 141.1 |
| இறப்பர் உற்பத்திகள் | 72.8 | 71.0 | -2.5 | 591.2 | 488.9 | -17.3 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 24.3 | 12.2 | -49.8 | 199.9 | 102.7 | -48.7 |
| பொறி மற்றும் எந்திரவியல் சாதனங்கள் | 32.5 | 31.1 | -4.4 | 275.0 | 209.5 | -23.8 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 6.0 | 7.1 | 18.5 | 120.5 | 46.2 | -61.6 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 42.6 | 22.0 | -48.4 | 327.5 | 268.1 | -18.1 |
| இரசாயன உற்பத்திகள் | 17.0 | 15.7 | -7.6 | 120.4 | 107.7 | -10.6 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 10.0 | 9.3 | -6.6 | 90.9 | 64.7 | -28.8 |
| அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் | 7.4 | 4.5 | -38.8 | 31.4 | 25.9 | -17.6 |
| தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணி | 9.7 | 5.7 | -41.7 | 74.1 | 38.2 | -48.5 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 6.7 | 23.7 | 255.3 | 49.2 | 72.6 | 47.5 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 13.9 | 10.4 | -24.8 | 120.9 | 76.0 | -37.2 |
| மட்பாண்டஉற்பத்திகள் | 2.8 | 1.8 | -36.2 | 19.6 | 13.3 | -32.1 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 25.1 | 25.9 | 3.3 | 180.3 | 160.2 | -11.2 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **217.3** | **215.9** | **-0.7** | **1,667.4** | **1,516.0** | **-9.1** |
| தேயிலை | 118.7 | 103.0 | -13.3 | 915.0 | 805.6 | -12.0 |
| இறப்பர் | 1.7 | 1.5 | -13.2 | 18.6 | 17.9 | -4.2 |
| தெங்கு | 28.1 | 33.9 | 20.9 | 232.1 | 221.5 | -4.6 |
| வாசனைத்திரவியங்கள் | 33.3 | 39.7 | 19.2 | 203.4 | 194.5 | -4.4 |
| காய்கறிகள் | 2.7 | 5.2 | 88.5 | 21.2 | 26.1 | 23.4 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 3.3 | 4.9 | 50.2 | 22.7 | 16.9 | -25.2 |
| சிறுவேளாண்மை உற்பத்திகள் | 8.9 | 12.1 | 35.3 | 70.0 | 100.3 | 43.2 |
| கடலுணவு | 20.5 | 15.6 | -24.0 | 184.5 | 133.2 | -27.8 |
| **3. கனிம ஏற்றுமதிகள்** | **1.9** | **1.6** | **-14.1** | **21.3** | **14.3** | **-33.1** |
| **4. வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **1.2** | **0.8** | **-37.4** | **11.3** | **9.3** | **-17.3** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **1,032.5** | **947.2** | **-8.3** | **8,030.2** | **6,445.0** | **-19.7** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை,இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்,இலங்கை மத்திய வங்கி

**வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்**

- 2020 மாச்சிலிருந்து அவதானிக்கப்பட்ட ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கின் தொடர்ச்சியாக 2020 ஓகத்தில் **வணிகப்பொருள் இறக்குமதிகள்** ஐ.அ.டொலர் 1,289 மில்லியனுக்கு 18.1 சதவீதம் கொண்ட வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தன. தெரிவுசெய்யப்பட்ட இன்றியமையானதவல்லாத பொருட்களின் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் தொடர்ச்சியாக எடுக்கப்பட்டு வரும் வழிமுறைகள் மற்றும் பன்னாட்டுச் சந்தையில் எரிபொருட்களுக்கான குறைந்த விலைகள் என்பன இவ்வீழ்ச்சிக்கு முக்கிய காரணங்களாக அமைந்தன.

- நுகர்வுப்பொருட்களின் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு உணவு, குடிபானங்கள் மற்றும் உணவல்லா நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகள் இரண்டுமே வழிவகுத்தன. உணவல்லா நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகள் வீழ்ச்சியடைந்தமைக்கு தொலைத்தொடர்பூட்டல் கருவிகள் (முக்கியமாக செல்லிடத் தொலைபேசிகள்) தவிர்ந்த, அனைத்துத் துணை வகைகள் மீதுமான செலவினமே காரணமாகும். 2020 ஓகத்தில் தனியாள் ஊர்திகளின் இறக்குமதிகள் மீதான செலவினம் 98.4 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. ஓகத்தில் உணவு மற்றும் குடிபானங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு பாற்பண்ணை உற்பத்திகள் (பால்மா), காய்கறிகள் (முக்கியமாக பெரிய வெங்காயம்), கடலுணவு (முக்கியமாக தகரத்திலடைக்கப்பட்ட மீன்), பழவர்க்கங்கள் (அப்பிள் மற்றும் திராட்சை) மற்றும் குடிபானங்கள் (முக்கியமாக வெறியக் குடிவகைகள்) என்பன வழிவகுத்தன. எனினும், எண்ணெய் மற்றும் கொழுப்பு (தேங்காய் எண்ணெய்), வாசனைத்திரவியங்கள் (முக்கியமாக மிளகாய்), சீனி மற்றும் தானியங்கள் மற்றும் அரைக்கப்பட்ட கைத்தொழில் உற்பத்திகள் (முக்கியமாக தேறல்) என்பன மீதான இறக்குமதிச் செலவினம் 2019 ஓகத்துடன் ஒப்பிடுகையில் 2020 ஓகத்து மாதத்தில் அதிகரித்தன.

- 2020 ஓகத்தில் இடைநிலைப்பொருட்களின் மீதான செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் வீழ்ச்சியடைந்தமைக்கு புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் (-16.7 சதவீதம்), எரிபொருள் (-5.2 சதவீதம்), வளமாக்கி (-74.4 சதவீதம்) என்பனவற்றை உள்ளடக்கிய பெரும்பாலான துணை வகைகளில் பதிவுசெய்யப்பட்ட வீழ்ச்சிகளே காரணமாக அமைந்தன. எரிபொருள் இறக்குமதிகளின் செலவினத்தில் ஏற்பட்ட குறைப்பிற்கு பன்னாட்டுச் சந்தையில் காணப்பட்ட குறைந்த பெற்றோலிய விலைகள் முக்கிய காரணமாக அமைந்த வேளையில் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020 ஓகத்தில் மசகெண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் என்பனவற்றில் உயர்ந்த இறக்குமதி அளவுகள் அவதானிக்கப்பட்டன. மசகெண்ணெயின் சராசரி விலை ஓராண்டிற்கு முன்னைய ஐ.அ.டொலர் 64.78 இலிருந்து 2020 ஓகத்தில் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 47.74 இற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, புடவை மற்றும் புடவைப்பொருட்களின் இறக்குமதிச் செலவினம் குறைவடைந்தமைக்கு துணி, கண்ணாடி இழைகள் மற்றும் நூலிழைகளின் தாழ்ந்த இறக்குமதிகளே வழிவகுத்தன. மேலும், கோதுமை மற்றும் சோளம், உணவுத் தயாரிப்புப் பொருட்கள், வேளாண்மை உள்ளீடுகள், கனிப்பொருள் உற்பத்திகள் மற்றும் தயாரிக்கப்படாத புகையிலை என்பன தவிர்ந்த, இடைநிலைப்பொருட்களின் கீழான அனைத்து மற்றைய துணை வகைகள் மீதான செலவினமும் 2019 ஓகத்துடன் ஒப்பிடுகையில் 2020 ஓகத்தில் வீழ்ச்சியடைந்தன.

- 2020 ஓகத்தில் முதலீட்டுப்பொருட்கள் மீதான செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு அனைத்துத் துணை வகைகளிலும் ஏற்பட்ட வீழ்ச்சிகளே காரணமாக அமைந்தது. இதற்கமைய, பொறிகள் மற்றும் கருவிகள் (முக்கியமாக தொலைத்தொடர்பூட்டல் கருவிகள்), கட்டடவாக்கப்பொருட்கள் (முக்கியமாக இரும்பு மற்றும் உருக்கு, இரும்பு மற்றும் உருக்குப்பொருட்கள் மற்றும் சிமெந்து) மற்றும் போக்குவரத்துச் சாதனங்கள் (முக்கியமாக முச்சில்லு வண்டிகள், தாங்கிகள் மற்றும் நீர்த்தாங்கள் போன்ற வர்த்தக ரீதியான ஊர்திகள்) மீதான செலவினம் 2019 ஓகத்துடன் ஒப்பிடுகையில் 2020 ஓகத்தில் வீழ்ச்சியடைந்தன.

- 2020 ஓகத்தில் இறக்குமதி அளவுச் சுட்டெண்ணும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்ணும் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் முறையே 3.6 சதவீதத்தினாலும் 15.1 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்து, குறைந்த அளவு மற்றும் குறைந்த விலைகள் இரண்டினதும் காரணமாக இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியை எடுத்துக்காட்டின.

**வரைபடம் 6: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 7: மாதாந்த இறக்குமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 3: வணிகப்பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம்(அ)

| வகை | ஓகத் 2019 ஐ.அ.டொ மில் | ஓகத் 2020 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) | சன-ஓகத் 2019 ஐ.அ.டொ மில் | சன-ஓகத் 2020 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **332.1** | **228.6** | **-31.2** | **2,499.2** | **2,300.3** | **-8.0** |
| உணவு மற்றும் குடிபானங்கள் | 117.9 | 106.1 | -10.0 | 917.1 | 1,023.7 | 11.6 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 2.9 | 3.0 | 3.4 | 22.2 | 21.0 | -5.3 |
| பாற்பண்ணை உற்பத்திகள் | 38.0 | 23.0 | -39.4 | 216.1 | 228.9 | 5.9 |
| காய்கறிகள் (ஆ) | 22.5 | 18.4 | -18.3 | 187.6 | 246.3 | 31.3 |
| கடலுணவு | 18.0 | 12.7 | -29.8 | 145.8 | 139.5 | -4.3 |
| சீனி மற்றும் இனிப்பு வகைகள் | 13.0 | 18.5 | 42.0 | 126.4 | 162.6 | 28.6 |
| வாசனைத்திரவியங்கள் | 6.7 | 8.0 | 19.1 | 68.1 | 84.2 | 23.6 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 16.8 | 22.6 | 34.6 | 151.0 | 141.2 | -6.5 |
| உணவல்லா நுகர்வுப்பொருட்கள் | 214.2 | 122.5 | -42.8 | 1,582.0 | 1,276.7 | -19.3 |
| தனியாள் ஊர்திகள் | 76.7 | 1.3 | -98.4 | 496.4 | 280.8 | -43.4 |
| மருந்து மற்றும் மருந்தாக்கற்பொருட்கள் | 50.9 | 47.6 | -6.4 | 350.5 | 385.3 | 9.9 |
| வீட்டு உபயோகப்பொருட்கள் | 17.6 | 8.6 | -51.1 | 131.3 | 100.4 | -23.5 |
| ஆடைகள் மற்றும் அதன் துணைப்பொருட்கள் | 18.4 | 13.2 | -28.2 | 174.5 | 137.6 | -21.1 |
| தொலைத்தொடர்பூட்டல் கருவிகள் | 16.0 | 27.6 | 72.6 | 157.2 | 174.6 | 11.1 |
| வீட்டுச்சாதனங்கள் மற்றும் தளபாடப்பொருட்கள் | 14.0 | 10.4 | -25.6 | 104.7 | 91.6 | -12.5 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 20.4 | 13.7 | -33.1 | 167.6 | 106.4 | -36.5 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **863.8** | **791.3** | **-8.4** | **7,379.8** | **5,692.4** | **-22.9** |
| எரிபொருள் | 261.2 | 247.5 | -5.2 | 2,576.8 | 1,691.2 | -34.4 |
| இதில் மசகெண்ணெய் | 45.3 | 69.3 | 52.8 | 630.8 | 387.6 | -38.5 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 215.8 | 178.2 | -17.4 | 1,820.7 | 1,174.4 | -35.5 |
| நிலக்கரி | 0.1 | 0.0 | -33.3 | 125.3 | 129.2 | 3.1 |
| வைரங்கள், அருங்கற்கள் மற்றும் உலோகங்கள் | 8.9 | 7.9 | -11.2 | 118.4 | 57.4 | -51.5 |
| புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் | 233.5 | 194.4 | -16.7 | 1,876.9 | 1,457.2 | -22.4 |
| தாள், தாள் அட்டைகள் மற்றும் அதன் பொருட்கள் | 42.0 | 30.5 | -27.3 | 295.5 | 239.5 | -19.0 |
| வேளாண்மை உள்ளீடுகள் | 13.3 | 14.6 | 10.0 | 127.1 | 132.5 | 4.3 |
| கோதுமை மற்றும் சோளம் | 24.9 | 46.0 | 84.9 | 203.4 | 229.3 | 12.7 |
| அடிப்படை உலோகங்கள் | 41.5 | 39.0 | -6.2 | 366.2 | 246.6 | -32.7 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 50.0 | 48.9 | -2.1 | 394.9 | 323.9 | -18.0 |
| இரசாயன உற்பத்திகள் | 66.8 | 65.3 | -2.3 | 553.5 | 518.3 | -6.4 |
| வளமாக்கி | 32.2 | 8.2 | -74.4 | 137.5 | 124.3 | -9.6 |
| இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் | 22.3 | 17.0 | -23.9 | 152.3 | 145.8 | -4.3 |
| கனிம உற்பத்திகள் | 11.3 | 14.3 | 26.4 | 137.0 | 107.6 | -21.5 |
| ஏனைய இடைநிலைப்பொருட்கள் | 55.9 | 57.5 | 2.8 | 440.2 | 418.7 | -4.9 |
| **3. முதலீட்டுப்பொருட்கள்** | **376.3** | **269.0** | **-28.5** | **3,001.8** | **2,253.2** | **-24.9** |
| பொறி மற்றும் சாதனம் | 184.4 | 177.6 | -3.7 | 1,610.2 | 1,324.6 | -17.7 |
| கட்டடப்பொருட்கள் | 132.6 | 82.0 | -38.2 | 1,006.9 | 671.4 | -33.3 |
| போக்குவரத்துச் சாதனம் | 58.9 | 9.1 | -84.5 | 380.2 | 255.3 | -32.8 |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 0.4 | 0.2 | -45.3 | 4.5 | 2.0 | -56.5 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **1.4** | **0.2** | **-87.3** | **4.8** | **11.4** | **136.9** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,573.6** | **1,289.1** | **-18.1** | **12,885.5** | **10,257.4** | **-20.4** |
| **எரிபொருள் அல்லா இறக்குமதிகள்** | **1,312.4** | **1,041.6** | **-20.6** | **10,308.8** | **8,566.1** | **-16.9** |

(அ) தற்காலிகமானவை
(ஆ) பருப்பு வகை, வெங்காயம், உருளைக்கிழங்கு, அவரை வகைகள் மற்றும் காய்கறிகள் என்பனவற்றை உள்ளடக்குகிறது
**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

## நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்

- கொவிட்-19 தொற்றினைக் கருத்திற் கொண்டு **சுற்றுலாப் பயணிகளின் வருகைக்காக** அனைத்து வானூர்திநிலையங்களும் துறைமுகங்களும் தொடர்ந்தும் மூடப்பட்டிருக்கின்றமையின் காரணமாக 2020 ஓகத்தில் தொடர்ந்தும் ஐந்தாவது மாதமாக சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் எதுவும் பதிவுசெய்யப்படவில்லை. எனவே, 2020 ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாத காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 1,267,737 வருகைகளுடன் ஒப்பிடுகையில் 507,311 ஆக தொடர்ந்தும் காணப்பட்டது. இதற்கமைய, சுற்றுலாப் பயணிகளின் வருகையை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்பட்ட **சுற்றுலாவிலிருந்தான** ஒன்றுசேர்ந்த **வருவாய்கள்** 2020 ஓகத்து வரையான இவ்வாண்டுக் காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 956 மில்லியனாகக் காணப்பட்டு 2019இன் தொடர்பான காலப்பகுதியிலிருந்து 60.0 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.

- அதேவேளை, **தொழிலாளர் பணவனுப்பல்கள்** 2020 ஓகத்தில் தொடர்ந்தும் மூன்றாவது மாதமாக ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், ஐ.அ.டொலர் 664 மில்லியனுக்கு 28.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தன. இவ்வதிகரிப்பானது 2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையான காலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்களின் ஒன்றுசேர்ந்த வீழ்ச்சியை 2019இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 4,346 மில்லியனுக்கு 1.5 சதவீதத்தில் மட்டுப்படுத்துவதற்கு உதவியது.

**வரைபடம் 8: மாதாந்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள்**




**மூலம்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 9: சுற்றுலா மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




**மூலங்கள்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், இலங்கை மத்திய வங்கி

## நிதியியல் பாய்ச்சல்கள்

- 2020 ஓகத்தில் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட **அரச பிணையங்கள்** சந்தையிலிருந்து ஐ.அ.டொலர் 7 மில்லியன் கொண்ட வெளிநாட்டு முதலீடுகளின் சிறிதளவிலான தேறிய வெளிப்பாய்ச்சலொன்று பதிவுசெய்யப்பட்டமையானது 2020 சனவரியிலிருந்து ஓகத்து வரையான காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 521 மில்லியன் கொண்ட ஒன்றுசேர்ந்த தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைத் தோற்றுவித்தது. ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்கள் சந்தையில் வெளிநாட்டு முதலீடுகளின் மொத்த வெளிநின்ற வெளிப்படுத்துகை 2020 ஓகத்தில் இறுதியில் ஐ.அ.டொலர் 63 மில்லியனாக அமைந்து ஒப்பீட்டு அடிப்படையில் மிகச் சொற்பமாகக் காணப்பட்டது.

- 2020 ஓகத்தில் **கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின்** இரண்டாந்தரச் சந்தையிலிருந்து ஐ.அ.டொலர் 44 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்று காணப்பட்டது. இம்மாதகாலப்பகுதியில் முதலாந்தரச் சந்தை உட்பாய்ச்சல்கள் எதுவும் பதிவுசெய்யப்படவில்லை. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை

2020இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 173 மில்லியன் (முதலாந்தரம் மற்றும் இரண்டாந்தரச் சந்தைகள் இரண்டும்) கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தது.

- அதேவேளை, 2020 ஓகத்தில் அரசாங்கத்திற்கான **நீண்ட காலக் கடன்களும்** ஐ.அ.டொலர் 50 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தது.

## பன்னாட்டு ஒதுக்குகள்

- 2020 ஓகத்து இறுதியில் **மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின்** மட்டம் 2020 யூலையுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 7.4 பில்லியனுக்கு அதிகரித்தது. இது 5.1 மாத இறக்குமதிகளுக்குச் சமமானது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2020 ஓகத்து இறுதியில் ஐ.அ.டொலர் 10.3 பில்லியனாக விளங்கி 7.2 மாத இறக்குமதிகளுக்குப் போதுமானதாகக் காணப்பட்டது.

**வரைபடம் 10: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் போதுமை**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வெளிநாட்டுச் செலாவணி வீத அசைவுகள்

- 2020 ஏப்பிறல் நடுப்பகுதியிலிருந்து தொடர்ச்சியாக உயர்வடைந்து வந்த இலங்கை ரூபா மாதத்தின் நடுப்பகுதியில் தளம்பலொன்றினை எடுத்துக்காட்டியதன் பின்னர் 2020 ஓகத்து காலப்பகுதியில் 0.3 சதவீதம் கொண்ட சிறிதளவு தேய்வினைப் பதிவுசெய்தது. 2020 ஒத்தோபர் 9ஆம் நாள் வரையான ஆண்டு காலப்பகுதியில் ரூபாவின் ஒட்டுமொத்த தேய்வு 1.4 சதவீதமாகக் காணப்பட்டது. இலங்கை மத்திய வங்கி மொத்த அலுவல்சார் ஒதுக்குகளைக் கட்டியெழுப்பும் நோக்குடன் உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தையில் தொடர்ந்தும் தலையிட்டது. 2020 செத்தெம்பர் இறுதி வரையான ஆண்டு காலப்பகுதியில் தேறிய அடிப்படையில் மத்திய வங்கி ஐ.அ.டொலர் 255.1 மில்லியனை ஈர்த்துக் கொண்டது. அதேவேளை, குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் ரூபாவானது யூரோ, யப்பானிய யென் மற்றும் அவுஸ்திரேலிய டொலர் என்பனவற்றிற்கெதிராக தேய்வடைந்த வேளையில் 2020 ஒத்தோபர் 9ஆம் நாள் வரையான இவ்வாண்டு காலப்பகுதியில் ஸ்ரேர்லிங் பவுண் மற்றும் இந்தியன் ரூபாவிற்கெதிராக உயர்வடைந்தது.

**வரைபடம் 11: ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2018 | 2019 | (2020 ஒத் 09 வரை) தேய்வு (-)/ உயர்வு (+) |
|---|---|---|---|
| ஐ.அ.டொலர் | -16.4% | +0.6% | -1.4% |
| யூரோ | -12.7% | +2.6% | -6.1% |
| ஸ்ரேர்லிங் பவுண் | -11.4% | -2.8% | -0.1% |
| யப்பானிய யென் | -18.1% | -1.0% | -3.9% |
| அவுஸ்திரேலிய டொலர் | -7.6% | +1.3% | -3.8% |
| இந்தியன் ரூபா | -8.7% | +2.6% | +1.3% |

மூலம்: இலங்கை மத்திய வங்கி